# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, வேலூர்

## ADR கட்டிடம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9.

## காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு

(Selection of Para Legal Volunteers in Police Stations for missing Children and other offences against Children)

<u>அறிவிப்பு எண்.02/2026</u>

தேதி: 18-09-2026

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் (W.P.(C) No.427/2022) Bachpan and Bachao Andolan vs. Union of India and Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படியும், தமிழ்நாடு அரசின் G.O.(Ms.) No.130, Dated 12-03-2026 உத்தரவின்படியும், வேலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, குழந்தை தொழிலாளர் முறை மற்றும் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், காணாமல் போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உருவாக்க (30-40) "சட்ட தன்னார்வலர்கள் (Para Legal Volunteers)" தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். மேற்படி இப்பணி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும்.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட தன்னார்வலர்களுக்கு கீழ்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

   **கல்வித் தகுதி :** குறைந்த பட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (+2) ஆகும்.

   **வயது வரம்பு :** 25 முதல் 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

   **முன்னுரிமை :** பட்டதாரிகளுக்கும், சமூகப் பணி, உளவியல் அல்லது அது சார்ந்த பிற துறைகளில் தகுதி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

2. சட்டத் தன்னார்வலர்களின் கடமை, பொறுப்பு :

* விசாரணையின் போது உதவுதல்
* மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
* காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
* மீட்கப்பட்ட குழந்தைகளுக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்
* நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்.

3. மதிப்பூதியம் மற்றும் பணிக்காலம்:

**மதிப்பூதியம்** : ஒரு வருகைக்கு ரூபாய்.1,000/- வீதம் மதிப்பூதியம் வழங்கப்படும். மேலும், ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூபாய்.5,000/- என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டே வழங்கப்படும்.

**பணிக்காலம்** : சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்குப் பட்டியலிடப்படுவார்கள், அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

4. தேர்வு முறை :

விண்ணப்பதாரர்கள் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுவால் நேர்காணல் மூலம் தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்.

5. பணி :

காணாமல் போன குழந்தை தொடர்பாக வழக்கு அல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் பதிவாகும் போதெல்லாம், காவல் நிலைய ஆய்வாளர் (SHO) அல்லது காவல் நிலைய எழுத்தர், DLSA/TLSC-க்குத் தகவல் தெரிவித்து, ஒரு சட்ட தன்னார்வலரை (PLV) காவல் நிலையத்திற்கு அனுப்பி, புகார்தாரருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உதவ ஏற்பாடு செய்ய வேண்டும்.

சட்டத் தன்னார்வலர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகள், தன்னார்வலர்களின் செயல்பாடு மற்றும் அவர்களின் பணிக்கால நீட்டிப்பை மதிப்பிடுவதற்காக, மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் தலைவரால் ஆய்வு செய்யப்படும்.

...3

சம்மந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளரால் (SHO) வழங்கப்படும் வருகைச் சான்றிதழ் மற்றும் சட்டத் தன்னார்வலர்களால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவால் அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்.

கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பிறந்த தேதி மற்றும் வயதிற்கான சான்று | பிறப்பு சான்றிதழ் S.S.L.C./H.S.C. சான்றிதழ் |
| 2 | ஜாதி சான்று | தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதிச் சான்றிதழ் |
| 3 | கல்வித் தகுதி சான்று | H.S.C./Degree/Diploma சான்றிதழ்கள் |
| 4 | இதர கல்வித் தகுதி சான்று | ஏதேனும் இருப்பின் |
| 5 | நிரந்தர முகவரிக்கான சான்று | குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் |
| 6 | அனுபவ சான்றிதழ்கள் | ஏதேனும் இருப்பின் |

மேற்கண்ட பிரிவினர்கள் சட்ட தன்னார்வலராக சேவைபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை **https://vellore.dcourts.gov.in/** என்ற வேலூர் மாவட்ட நீதிமன்ற இணைய தளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, **பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் பதிவு தபால் மூலம் மட்டுமே 21-10-2026-ஆம் தேதி மாலை 05.30 மணிக்குள்,** கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் உள்ள வேலூர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவை வந்தடையும் வகையில் **விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.** மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விவரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவர்களின் விவரமும் **https://vellore.dcourts.gov.in/** என்ற வேலூர் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பம் வந்து சேரவேண்டிய முகவரி :

**செயலாளர்,**
**மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,**
**ADR கட்டிடம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,**
**சத்துவாச்சாரி, வேலூர் - 632009.**

//ஒம்-XXXXX//
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
வேலூர்.

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, வேலூர்
# சட்ட தன்னார்வலர்கள் விண்ணப்ப படிவம்.

விண்ணப்பதாரர் புகைப்படம் (சுய சான்றொப்பம் இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3 | பாலினம் | : | ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர் |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 5 | கல்வித் தகுதி | : | |
| 6 | விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | : | |
| 7 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முவரி | : | |
| 8 | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 9 | விண்ணப்பதாருக்கு எதிராக காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம். | | |
| 10 | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 11 | விண்ணப்பதாரர் எந்த காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டவர்? | : | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

- மேற்கண்ட விவரங்கள் யாவும் உண்மையென உளமாற உறுதி கூறுகிறேன்.
- சட்ட தன்னார்வலர் பணி நிரந்தரபணி அல்ல, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும்.
- பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் நான் கோரமுடியாது.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

இடம்: